1975 நவம்பர் 5]

## நாக நதியின் குறுக்கே அணை

*191 வி—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், அமிர்திக்காட்டிற்கு அருகில் நாகநதி ஆற்றுக்குக் குறுக்காக கீழ்அரசம்பட்டுக்கருகில் அணை கட்டுகின்ற திட்டம் பற்றிய ஆய்வுரைகள் அரசுக்கு கிடைத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) அரசுக்கு வரவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. நா. வீராசாமி:** அரசுக்கு வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தில் அமிர்திக் காட்டிற்கு அருகில், நாகநதி ஆற்றுக்குக் குறுக்கே அணை கட்டினல் நல்ல பாசனவசதி கிடைக்கும் என்று சொல்கிறார்கள், அமிர்திக்காடு உல்லாசப் பயணிகளை ஈர்க்கக்கூடிய இடமாகவும் இருக்கிறது. ஆகவே, உடனடியாக இந்த அணையைக் கட்ட நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அரசுக்கு வரவில்லை என்று சொன்னேனே தவிர அது தலைப் பொறியாளரின் பரிசீலனையில் இருக்கிறது. அவரிடம் இருந்து தலைமைப் பொறி யாளருக்கு வந்தவுடன் தலைமைப் பொறியாளர் அதனைப் பரிசீலிப்பார்.

## மாவட்டங்களைப் பிரித்தமைத்தல்

*192 வி—திரு. எம். முத்தையா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடியை தனி மாவட்டமாகப் பிரிக்கும் உத்தேசம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

[1975 நவம்பர் 5

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வாக்காளர் பட்டியலைத் திருத்தும் பணி முடியும் வரையிலும், மறு உத்திரவு பிறப்பிக்கப் படும் வரையிலும், தற்போது உள்ள நிர்வாக அமைப்பில் எந்தவித மாற்றமும் செய்யக்கூடாது என அரசு உத்திரவிட்டிருப்பதால் திருநெல்வேலி உட்பட ஏனைய பெரிய மாவட்டங்களைப் பிரிப்பதற்கான காலவரம்பை உடனடியாக நிர்ணயிக்க இயலாது.

திரு. எம். முத்தையா: திருநெல்வேலி மாவட்டம் பெரிய மாவட்டமாக இருக்கிறது. இப்போதே தூத்துக்குடியில் ஐ.ஏ.எஸ். டெப்டி கலெக்டர் இருக்கிறார். இதை இரண்டாகப் பிரித்தால் நிர்வாக வசதி அதிகப்படும் என்கிற காரணத்தினால் இதை இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

*193 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தை இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு .செ. மாதவன்: வாக்காளர் பட்டியலைத் திருத்தும் பணி முடியும் வரையிலும், மறு உத்திரவு பிறப்பிக்கப் படும் வரையிலும் தற்போது உள்ள நிர்வாக அமைப்பில் எந்தவித மாற்றமும் செய்யக் கூடாது என அரசு உத்திரவிட்டிருப்பதால் தஞ்சை மாவட்டம் உள்பட ஏனைய பெரிய மாவட்டங்களைப் பிரிப்பதற்கான காலவரம்பை உடனடியாக நிர்ணயிக்க இயலாது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, வாக்காளர் பட்டியலைத் திருத்தும் பணியெல்லாம் முடிந்ததற்குப் பின்னாலே தஞ்சை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும்போது, கீழத் தஞ்சை, மேலத் தஞ்சை என்று பிரிக்கப்படுமானால் மேலத் தஞ்சைக்கு தஞ்சை என்றும் கீழத் தஞ்சைக்கு வேறு பெயரிட எண்ணியிருப்பதாகவும் அப்படியிருக்கும்போது கீழத் தஞ்சைக்கு பூம்புகார் அல்லது திருவாரூர் இவை இரண்டில் ஏதேனும் ஒன்று தலைநகராக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. இதில் எது தலைநகராக அமையும் என்று சொல்ல முடியுமா?